தொழில் திணைக்களம்

කම්කරු දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

தொழில் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

Department of Labour

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports labled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வினாத்தொடர் இல. 183

அமைப்பு - (இல. 01)

நிறுவனத்தின் பெயர் - தொழில் திணைக்களம்

குழுவினால் அடையாளங் காணப்பட்ட தவறுகள்	தற்போதைய முன்னேற்றம் / தவறுகளை சீர்ப்படுத்துவதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.
இல. 174/2004 யும் 204.05.11 ஆந் திகதியையும் கொண்ட பொதுக்கணக்குகள் சுற்று நிருபத்தின் நியதிகளின் படி அரசாங்க சம்பளங்கள் தயாரிப்பதற்கான கணினி மென்பொருளுக்குரிய முதலாம் இரண்டாம், மூன்றாம் இரகசியக் குறியீடுகள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை.	GPS மென்பொருளுக்குரிய இரகசியக் குறியீட்டினை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுப்பும் அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் ஒருமாதத்திற்குள் பதில் அனுப்பப்படவில்லை	கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுப்பும் அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை	உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2016/30 ஆம் இலக்கத்தையும் 2016.12.29 ஆந் திகதியைமுடைய பொது நிர்வாகச் சுற் றிக்கையின் பந்தி 3.1 இன் நியதிகளின் படி நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருளின் எரிதிறன் பரீட்சிக்கப்படவில்லை.	19 வாகனங்கள் மட்டுமே எரிபொருள் சமனப்படுத்தல் நடைமுறைக்குட்படுத்தப்பட்டன மீதமாக உள்ள வாகனங்களின் பரிசோதனையை 2020 மற்றும் 2021 இல நாடு முழுவதும் பரவிய கொரோன தொற்று நோய்காரணமாக நடைமுறைப்படுத்துதல் சிக்கலானது. அதன் பின்னர், அனைத்து அலுவலகங்களுக்கும் எரிபொருள் எரிதிறன் மீதான 2022 ஆம் ஆண்டின் அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டது. எவ்வாறெனினும், நாட்டில் உள்ள எரிபொருள் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் ஒதுக்கீட்டு நடைமுறை என்பவற்றின் காரணமாக எரிபொருள் சமநிலைச் செயன்முறை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. எரிபொருள் சமநிலைக்காக 2021 மற்றும் 2022 இல் தேவையான குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் மேலுள்ள காரணங்களினால்

	அனைத்து வாகனங்கள் பொருட்டும் எரிபொருள் சமநிலைநடைமுறையை பூரணப்படுத்தப்பட முடியவில்லை. ஒதுக்கீட்டு முறைமை நீக்கப்பட்டதும் எரிபொருள சமநிலை நடைமுறையினை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
ஒரு வருடத்திற்கும் மேலாக கடன் மீதங்களின் நிலுவைகள் இருக்கின்றன.	கடன் நிலுவைகளை மீள அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை. 1. பிணை நின்றவர்களிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2. கடன் காரர்களுக்கு ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 3. தேர்தல் ஆணைக்குழுவிற்குக் முகவரிகளைப் பரிசீலிப்பதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டன. 4. மாகாணச்செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.
நி.ஒ. 571 இன் நியதிகளின்படி பொதுவைப்புக் கணக்கின் காலாவதியான வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தற்பொழுது பொதுவைப்புக் கணக்கின் காலாவதியான வைப்புகள் தொடர்பாக நி.ஒ. 571 இன் நியதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
நி.ஒ. 371 இன் படி இடைக்காலக் கட்டுநிதி வழங்கப்பட்டது அது முடிவுற்று ஒருமாத்தின் பின்னர் அது தீர்க்கப்படவில்லை	இடைக்காலக் கட்டுநியைப் பெற்றுக் கொண்ட அனைத்து அலுவலகங்களுக்கும் நி. ஒ. 371 இன் படி ஒரு மாதத்திற்குள் அவற்றை தீர்க்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.
மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டிற்கான மீளாய்வு அறிக்கை உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை.	தொழில் திணைக்களத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த முன்னேற்ற அறிக்கையானது 2021.10.21 இல் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த வருடத்தில் ஏற்பட்ட கொவிட் -19 சர்வதேச தொற்று காரணமாக அதனை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. மேலும், 2021 ஆம் ஆண்டின் முன்னேற்ற அறிக்கையையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் அறிக்கை, அதே போல் இனி வரும் வருடங்களிலும் முன்னேற்ற அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
பொதுமக்கள் தங்களது முறைப்பாடுகளை	தொழில் திணைக்களத்தினால்

அல்லது பாராட்டுகளை நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையத்தளத்தின் ஊடாக அனுப்புவதற்கான சந்தரப்பம் வழங்கப்படவில்லை.	பராமரிக்கப்படும் www.labourdept.gov.lk இணையத்தளம் பொதுமக்களின் தேவைகள், விமர்சனங்கள் மற்றும் பாராட்டுக்களை "எங்களை தொடர்பு கொள்ளவும்" என்ற உலாவியின் (tab) கீழ் திணைக்களத்திற்கு அனுப்பும் வசதிகளைக் கொடுக்கின்றது. இதற்கு மேலும், பொதுமக்கள் தங்களது விசாரணைகள், ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை திணைக்களத்திற்கு இணையத்தின் ஊடாக அனுப்புவதற்கு மேலும் வசதிகளை கொண்டுள்ள புதிய இணையத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
MSDW/08/65 இலக்கத்தையும் 2018.04.27 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி நிலையான அபிவிருத்தி விவகாரங்களை நடாத்திச் செல்வதற்கு ஒருங்கிணைப்பாளர்கள் இருவரை நியமிக்க வேண்டும் என்பது தொடர்பான விபரங்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்படவில்லை.	இநது தொடர்பான விபரங்கள் திறன்கள் அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சிற்கு 2020.06.17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.(தற்பொழுது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஆகும்.) (கடிதத்தின் பிரதி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.)
பிரசைகள் / வாடிக்கையாளர் கூட்டம் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படவில்லை	பிரசைகள் / வாடிக்கையாளர் கூட்டத்தினை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்வதற்காக பொருத்தமான முறை ஒன்றை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல் என்பன அதன் இறுதிக் கட்டத்தில் உள்ளது என்பதுடன் அதனை 2023.01.31 இல சமர்ப்பிக்க முடியும்.
நிறுவனத்தின் பிரசைகள் / வாடிக்கையாளர் கூட்டத்தினை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்வதனை அமுல்படுத்துதவதற்கு சரியான முறை ஒன்று காணப்படவில்லை.	பிரசைகள் / வாடிக்கையாளர் கூட்டத்தினை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்வதற்காக பொருத்தமான முறை ஒன்றை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல் என்பன அதன் இறுதிக் கட்டத்தில் உள்ளது என்பதுடன் அதனை 2023.01.31 இல சமர்ப்பிக்க முடியும்.
பொது நிர்வாக ஏற்பாடுகளின்படி முறையான மனிதவள திட்டம் தயாரிக்கப்படவில்லை	2020 ஆம் ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படவில்லை ஆனால்2021 மற்றும் 2022 இற்குத் தயாரிக்கப்பட்டது. மேலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான இற்றைப்படுத்தப்பட்ட வரைவுத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் திட்டத்தை வருடா வருடம் இற்றைப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மனிதவளத் திட்டத்தில் வருடாந்தம்	2020 ஆண்டிற்கான மனிதவளத் அபிவிருத்தி

ஊழியருக்கு ஆகக் குறைந்த 12 மணித்தியாலங்களுக்கான பயிற்சி பரிந்துரைக்கப்படவில்லை.	திட்டம் தயாரிக்கப்படவில்லை, ஆனால் 2021 மற்றும் 2022 இற்கான வருடாந்தம் ஒரு ஊழியருக்கு ஆகக் குறைந்த 12 மணித்தியாலங்களுக்கான பயிற்சிக்கு பரிந்துரைக்கப்பட்டு மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அத்தகைய ஆகக் குறைந்த பயிற்சி வழங்குவதற்கான திட்டவரைவு தயரிக்கப்பட்டுள்ளதுடன் அது எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்படும்.
அனைத்து அலுவலர்களுக்கான செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்படவில்லை	தொழில் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 3121 என்பதுடன் தற்பொழுது 2022. 09. 30 இல் அது 2776 ஆகும். இதன் பிரகாரம், 02/2018 ஆம் இலக்கத்தையும் 2018.01.24 ஆம் திகதியையுமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி ஒவ்வொரு அலுவலர்களுக்குமான செயல்திறன் ஒப்பந்தங்ளை கைச்சாத்திடுதல் என்பது ஒர் சிக்கலான நடைமுறையாக இருப்பதனால் எந்த முறையில் அவற்றைச் செயல்படுத்த முடியும் என்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மனுஷ நாணயக்கார

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

மனுஷ நாணயக்கார
தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்
தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
7 வது மாடி, "மிஹிகத்தர நிலையம்"
நாரஹேன்பிட்ட கொழும்பு 05